

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (16.6.2023) தலைமைச் செயலகத்தில், இந்தியாவிற்கான அமெரிக்க நாட்டுத் தூதர் எரிக் கர்செட்டி அவர்கள் (Mr. Eric Garcetti) சந்தித்துப் பேசினார்.

## சென்னை விமான நிலையத்தில் பழுது பார்க்கும் மையம்!

சென்னை, ஜூன் 18-

நாடு முழுவதும் சென்னை உள்பட 8 பன்னாட்டு விமான நிலையங்களில் விமானம் பழுது நீக்கும் மற்றும் பராமரிப்பு மையம் தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் சென்னை விமான நிலையத்துக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் புதிதாக விமான சேவை தொடங்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நாடு முழுவதும் விமான சேவைகளை விரிவுபடுத்தி மேம்படுத்துவதற்கு இந்திய விமான நிலைய ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்தியாவில் விமான சேவைகள் அதிக அளவில் இருந்தாலும், விமானங்களில் ஏற்படும் பழுதுகளை சீர் செய்வது, விமானங்களை பழுது பார்ப்பது போன்ற மையங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. இதையடுத்து இந்திய விமான நிலைய ஆணையம் டெல்லி, மும்பை, கொல்கத்தா, பெங்களூரு, சென்னை உள்ளிட்ட 8 பன்னாடு விமான நிலையங்களை தேர்வு செய்து, அங்கு விமானங்களை பழுது பார்த்தல், பராமரித்தல், விமானத்தில் பழுதடைந்த உபகரணங்களை நீக்கிவிட்டு புதிய உபகரணங்கள் பொருத்துதல், விமானங்களுக்கு வர்ணம் பூசி புதுப்பித்தல் போன்ற பணிகளுக்காக பழுது பார்க்கும் மையங்கள் அமைக்கப்படுகின்றன.



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, நேற்று முன்தினம் (16.06.2023) கல்லணையிலிருந்து டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மா.பிரதீப் குமார், (திருச்சிராப்பள்ளி), தீபக் ஜேக்கப், (தஞ்சாவூர்), திருமதி. தி.சாருஸ்ரீ, (திருவாரூர்), ஜானி டாம் வர்கீஸ், (நாகப்பட்டிணம்), திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, (புதுக்கோட்டை), ஏ.பி.மகாபாரதி, (மயிலாடுதுறை), நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், செ.ராமலிங்கம், மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன் (திருவையாறு), கா.அண்ணாதுரை (பட்டுக்கோட்டை), மாநகராட்சி மேயர்கள் மு.அன்பழகன் (திருச்சிராப்பள்ளி), சண் ராமநாதன் (தஞ்சாவூர்) தலைமை பொறியாளர் (நீ.வ.து) பொறி.இராமமூர்த்தி, கண்காணிப்பு பொறியாளர்கள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் விவசாய பெருங்குடிமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### செந்தில்பாலாஜி இலாகா இல்லாத அமைச்சராகத் தொடர்வார்!

# நிதியமைச்சர் தங்கம் தென்னரசுக்கு கூடுதலாக மின்துறை!

# வீட்டுவசதித்துறை அமைச்சர் முத்துசாமிக்கு மதுவிலக்கு - ஆயத்தீர்வைத் துறை!

### கூடுதலாக ஒதுக்கி அரசாணை வெளியீடு!

சென்னை, ஜூன்.18-

நிதி அமைச்சர் தங்கம் தென்னரசுக்கு மின்துறையை கூடுதலாகவும், வீட்டு வசதித் துறை அமைச்சர் ச.முத்துசாமிக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையை கூடுதலாக ஒதுக்கியும், செந்தில்பாலாஜி இலாகா இல்லாத அமைச்சராகத் தொடர்வார் எனவும் தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

இது குறித்து அரசின் ஆணை வருமாறு:

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவர்கள் பொறுப்பில் இருந்த மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை ஆகியவை அவரது உடல் நிலையின் காரணமாக, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கு மின்சாரத் துறையும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் ச.முத்துசாமி அவர்களுக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையையும் பிரித்து வழங்கி இன்று தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

வி.செந்தில் பாலாஜி அவர்கள் இலாகா இல்லாத (Minister without portfolio) அமைச்சராகத் தொடரவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

### தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணைய

# நான்காம் வகை காலிப் பணியிடங்களை உயர்த்திடுவீர்!

### ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி. வேண்டுகோள்!

சென்னை, ஜூன் 18-

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கொரோனா கொடுந்தொற்று காரணமாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வுகள் 2019 ஆம் ஆண்டுக்குப் பிறகு நடத்த முடியவில்லை.



இந்நிலையில், மூன்றாண்டுகள் கழித்து, 24.07.2022 அன்று இதற்கான தேர்வுகள் நடத்தப்பட்டு, 24.03.2023 அன்று தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டன. இதற்கான காலிப் பணி இடங்கள் 10,117 என்று தேர்வாணையம் அறிவித்துள்ளது.

மூன்றாண்டுகள் தேர்வுகள் நடத்தப்படாத நிலையை கவனத்தில் கொண்டு, பறிபோன 30,000 பேருக்கான வேலைவாய்ப்புகளையும் இணைத்து, அவைகளுக்கான தேர்வையும், கலந்தாய்வையும் இந்த ஆண்டிலேயே நடத்தி அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்கி, வேலை கிட்டாத இளைஞர்களின் வாழ்க்கையில் ஒளி ஏற்றி வைக்குமாறு தமிழ்நாடு அரசை மறுமலர்ச்சி தி.மு.க. சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவ்வறிக்கையில் வைகோ எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ்நாட்டில் விண்வெளி

# பாதுகாப்பு வழித்தட முன்னெடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமை!

சென்னை, ஜூன் 18-

தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தால் (TIIC) ஏற்பாடு செய்யப்பட்ட பாதுகாப்பு வழித்தடத்தின் கலந்துரையாடல் கூட்டம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இராணுவ லெப்டினன்ட் ஜெனரல் கே.எஸ். பிரார், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், தொழில் வல்லுநர்கள், பாதுகாப்புத் துறை, AVNL, DRDO, CVRDE, AIDAT, IIT Madras, SIDM ஆகிய துறைகளின் அதிகாரிகள் மற்றும் தமிழ்நாட்டின் முன்னணி தொழிலதிபர்கள் கலந்துகொண்டனர்.

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் எஸ். கிருஷ்ணன், தொழில் துறை அமைச்சர் அவர்களையும் மற்றும் கூட்டத்தில் பங்கு கொண்டோரையும் வரவேற்றார். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஹன்ஸ் ராஜ் வர்மா, பாதுகாப்புத் துறையில் தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உள்ள வாய்ப்புகள் குறித்து சிறப்புரையாற்றினார்.

மேலும், ஆயுதமேந்திய போர் வாகனங்களின் பராமரிப்பு, பழுது மற்றும் மறுசீரமைப்பில் உள்ள வாய்ப்புகள், L&T கப்பல் கட்டும் தளத்தின் உள்கட்டமைப்பு, BHELஇன் பயன்படுத்தப்படாத திறன், வெடிமருந்து மையமாக விளங்கவுள்ள சிவகாசி மற்றும் தொழில்நுட்ப ஜவுளிகள் ஆகியவற்றை அவர் வலியுறுத்தினார்.

இராணுவ லெப்டினன்ட் ஜெனரல், கே.எஸ். பிரார், “இந்தியாவில் தயாரிப்பு” பற்றிய அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். மேலும், அறிவுசார் சொத்துரிமை மற்றும் வடிவமைப்பின் முக்கியத்துவம் மற்றும் பாதுகாப்புத் துறையில் உள்ள பெருவாரியான வாய்ப்புகள் குறித்தும் அவர் பேசினார்.

பாதுகாப்புத்துறை அதிகாரிகள், முன்னணி தொழிலதிபர்கள் மற்றும் நிபுணர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பாதுகாப்புப் பிரிவில் ஈடுபடச் செய்வது குறித்து பேசினார்கள். பெரும் தொலைவிற்குப் பாயும் ஏவுகணைப் பற்றிய சோதனை வசதிகளை உருவாக்குதல், உள்நாட்டு விமான உற்பத்திக்கான ஊக்குவிப்பு, விண்வெளி தொடர்பான சான்றிதழ் நிறுவனம், அரசின் நிதியுதவி, சோதனை மையங்கள், சிறப்பு மையம், பாதுகாப்பு சம்பந்தப்பட்டதில் கொள்முதல் நடைமுறைகள் ஆகிய அனைத்தும் விவாதிக்கப்பட்டன.

தொழில் துறை அமைச்சர், இந்தத் துறையில் உள்ள தேவை மற்றும் இடைவெளியை அரசாங்கம் புரிந்து கொண்டுள்ளதாகவும், பாதுகாப்புத் துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தொழில்களுக்கு ஆதரவளிப்பதற்கான அரசாங்கத்தின் நோக்கத்தையும் வெளிப்படுத்தினார். தொழில் துறை அமைச்சர், மாநிலத்தை நோக்கிய தொழில்களின் பங்குக்கு தமிழ்நாடு அரசு சிறப்பு முயற்சிகள் எடுக்கும் என்று உறுதி அளித்ததுடன், 2030ஆம் ஆண்டில் தமிழகத்தை USD 1.00 டிரில்லியன் பொருளாதாரமாக மாற்றும் முதலமைச்சரின் தொலைநோக்குப் பார்வையை அடையும்பொருட்டு தமிழ்நாடு அரசு செயல்படும் என்றும் உறுதியளித்தார்.

# தி. மு. க. மீனவர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### டாக்டர். அ .ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு!

தி. மு. க. மீனவர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 21.06.2023 புதன் கிழமை மாலை 4 மணியளவில் சென்னை - அண்ணா சாலையில் உள்ள ஹோட்டல் ஸ்டாலின் பிளசண்ட் பார்க்கில் கழக மீனவர் அணித் தலைவர் இரா. பெர்னார்டு தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழக மீனவர் அணி துணைத் தலைவர்கள், துணைச் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்: முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் கழக ஆக்கப்பணிகள்.

**டாக்டர் அ.ஜோசப் ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. மாநில மீனவர் அணி

### மருத்துவப்படிப்பில் இடஒதுக்கீட்டுக்கு எதிரான ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் மாணவர் விரோத

# தமிழ்நாடு ஆளுநரைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் - சி.வி.எம்.பி.எழிலரசன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூன் 18-

மருத்துவப் படிப்பில் இடஒதுக்கீட்டை ஒழித்துக் கட்டும் வகையில், மாணவர் விரோத போக்கை கடைப்பிடிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. மோடி அரசைக் கண்டித்தும், 9,29,142 தமிழ்நாட்டு மாணவர்களுக்கு பட்டப்படிப்பு சான்றிதழ் வழங்கும் கடமையை ஆற்றாமல், சனாதனத்தைப் பேசிக் கொண்டு, துணை வேந்தர் நியமனம் தொடர்பாக சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுக்கு ஒப்புதல் வழங்காமல் கிடப்பில் போட்டிருக்கும் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவியைக் கண்டித்தும், மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு (Federation of Students Organisation - Tamil Nadu) சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதன் விபரம் வருமாறு:-

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் உரிமைகளை பறிக்கின்ற வகையிலும், அந்த அரசிற்கு எதிராக தான்தோன்றி தனமாக செயல்படும் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களை கண்டித்து, நேற்று முன்தினம் (16.6.2023) காலை 10.00 மணியளவில் சென்னை, ஆளுநர் மாளிகைக்கு அருகிலுள்ள சின்னமலை சாலை சந்திப்பில், தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பின் சார்பில், தி.மு.கழக மாணவர் அணிச் செயலாளரும், தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளருமான சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ., தலைமையில், மாநில மாணவர் அணியின் நிர்வாகிகள் இரா. ராஜீவ் காந்தி, பூவை சி.ஜெரால்டு, எஸ்.மோகன், மன்னை த. சோழராஜன், சேலம் ரா. தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி.கோகுல், பூர்ண சங்கீதா, ஜெ.வீரமணி மற்றும் கழக தகவல் தொழில்நுட்ப அணியின் ஆலோசகர் கோவிலெனின் ஆகியோர் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு, திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் ச.பிரின்சு என்னாரசு பெரியார் வரவேற்புரையும், இந்திய மாணவர் சங்கத்தின் மாநில செயலாளரும், தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளருமான க.நிரூபன் சக்கரவர்த்தி தொடக்கவுரையும் ஆற்றினர்.

தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பில் உள்ள நிர்வாகிகளான அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநில செயலாளர் பா. தினேஷ், திராவிட மாணவர் கழகத்தின் மாநிலச் செயலாளர் இரா.செந்தூர பாண்டியன், அகில இந்திய மாணவர் காங்கிரஸ் தேசிய ஒருங்கிணைப்பாளர் இனியன் ராபர்ட், வி.சி.க.வைச் சேர்ந்த முற்போக்கு மாணவர் கழக மாநில துணைச் செயலாளர் தயா நெப்போலியன், முஸ்லிம் மாணவர் பேரவை தேசிய துணைத் தலைவர் புளியங்குடி அல் அமீன், சமூகநீதி மாணவர் இயக்கம் மாநில பொருளாளர் எம்.ஜெ.இர்ஷாத், மாணவர் இந்தியா மாநிலத் தலைவர் எஸ்.பஷீர் அஹமது, வடசென்னை கிழக்கு மாவட்ட ம.தி.மு.க. மாணவர் அணி அமைப்பாளர் கவிஞர் வி.ஏ. முகமது ரிலுவான் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

மேலும், இந்திய மாணவர் சங்க மாநில தலைவர் கோ. அரவிந்தசாமி, அகில இந்திய மாணவர் காங்கிரஸ் மாநிலத் தலைவர் சின்னத்தம்பி, ம.தி.மு.க. மாணவர் அணியின் மாநில துணைச் செயலாளர் வி.சேஷன், வி.சி.க. மாநில துணைச் செயலாளர் செஞ்சுடர்,

கழக மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர்கள், கொட்டிவாக்கம் அருண், சரவணன், வானவில் விஜய், சோமசுந்தரமூர்த்தி, பிரபு, வி.கே.பாபு, தி.ராம்பிரசாத், வெற்றி, தியாகு, எஸ்.பி.மணிமாறன், ஸ்டீபன், பால்பாண்டி, ராம்ராஜ், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.டி. கார்த்தி உள்ளிட்ட மாவட்ட மாணவர் அணியின் துணை அமைப்பாளர்கள், பல்வேறு பொறுப்புகளை வகிக்கக்கூடிய மாணவர் அணி நிர்வாகிகள், கல்லூரி மாணவர் அமைப்புகளின் நிர்வாகிகள், தோழர்கள், மாணவர்கள், இளைஞர்கள் என 1500க்கும் மேற்பட்டோர் பங்கேற்று கண்டன ஆர்ப்பாட்டத்தை பெருவெற்றியடையச் செய்தனர்.

தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில், பல்கலைக்கழகப் பட்டமளிப்பைத் தாமதம் செய்தல், தமிழ்நாடு அரசு துணை வேந்தர்களை நியமனம் செய்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறை வேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகளுக்கு ஒப்புதல் வழங்காமல் இருப்பதை கண்டித்தும், பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்களை நியமிப்பதில், மாநில அரசின் உரிமையை பறித்து, ஒன்றிய அரசின் ஆதிக்கத்தை கொண்டு வந்து திணித்தல் ஆகியவற்றிற்காக தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களைக் கண்டித்தும்,

மருத்துவக் கல்வி கலந்தாய்வு நடத்துகின்ற உரிமையை மாநில அரசுகளிடமிருந்து பறிக்க நினைக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், தமிழ்நாடு மாணவர்கள் உரிமைக்கும், நலனுக்கும் எதிராகவும் செயல்பட்டு, மாநில உரிமையைப் பறிக்க நினைக்கும் பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், அரசியலமைப்புச் சட்டப்படி ஆளுநராகப் பொறுப்பேற்றுக் கொண்ட ஆளுநர் ஆர்.என். ரவி அச்சட்டத்தை மதிக்காமல் அரசியல் செய்வதை கண்டித்தும் பல்வேறு கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன.



மாணவர்களின் நலன் பாதிக்கும் வகையில் செயல்படும் தமிழ்நாடு ஆளுநரை கண்டித்து நேற்று முன்தினம், காலை ஆளுநர் மாளிகை அருகே சின்னமலை சந்திப்பில் கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் தி.மு.க. தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பின் நிர்வாகிகள் மற்றும் கழக மாணவர் அணி நிர்வாகிகள் உட்பட மாணவர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு ஆளுநருக்கு எதிராக கண்டன முழக்கமிட்டனர்.